## பொலிஸ் வெகுமதி நிதியம் - 2012

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கை

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதிக் கூற்றுக்களானவை காசு அடிப்படை மற்றும் அட்டுறு அடிப்படை ஆகிய 02 முறைகளையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நீதி மன்றத் தண்டப்பணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 184,166 பெறுமதியான தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் நீதி மன்றத் தண்டப்பணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 512,997 தொகையான இரண்டு காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் அம்மதிப்பிழந்த காசோலைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,500,000 ஆன கண்காட்சி முற்பணத் தொகையிலிருந்து ரூபா 1,880,000 ஆன தொகை 2012 திசெம்பர் 31 இல் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை முழுவதும் முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வெகுமதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினத்திற்கும் பொலிஸ் தலைமையகத்தின் குற்றவியல்

பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள செலவினத்திற்குமிடையே ரூபா 34,972,547 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி செலவினம் | குற்றவியல் பிரிவின் அறிக்கைகளின் படி செலவினம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சாதாரண மற்றும் விசேட கட்டுநிதியின் கீழ் வெகுமதி செலுத்துதல் | 585,251,602 | 553,382,055 | 31,869,547 |
| விசேட வெகுமதிக்கான கொடுப்பனவு | 33,091,500 | 29,988,500 | 3,103,000 |
| | 618,343,102 | 583,370,555 | 34,972,547 |

### 1.2.4 தொங்கல் கணக்கு

2003 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் ரூபா 48,929 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியினை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 2,000,000 தொகையான முற்பணங்களுக்காக 13 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 கருமங்களிற்காக கிடைத்திருந்த தொகையிலிருந்து எஞ்சிய ரூபா 660,997 தொகையினை தீர்த்து வைப்பதற்கு 07 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுனாமி உதவிகளை மோசடி செய்தமை தொடர்பில் நிதியத்தினால் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 64,800 தொகை அறவிடப்பட முடியாததாகக் கருதப்பட்டு திரட்டிய நிதியத்திற்குப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**1.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய விசேட வெகுமதிகளின் பெறுமதி ரூபா 65,304,411 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 369,271,321 தொகையான மிகையினை விளைவித்திருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 248,926,156 ஆக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 120,345,165 தொகையான வளர்ச்சிக்கு நீதிமன்ற தண்டப்பணங்களும் ஏனைய பெறுவனவுகளும் மற்றும் முதலீட்டு வருமானம் என்பன முறையே ரூபா 92,921,561 மற்றும் ரூபா 79,164,379 ஆல் அதிகரித்திருந்தமை விசேடமாக தாக்கம் செலுத்தியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

ரூபா 90 மில்லியனுக்கு அண்மித்த தொகை ஆண்டு முழுவதும் விளைவற்று வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டதுடன் தேவைப்பாட்டினை சரியாக முன்னாய்வு செய்திருந்தால் மிகை நிதியினை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து ரூபா 11.2 மில்லியன் தொகையான வட்டி வருமானத்தினை உழைக்கக் கூடியதாக இருந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2 செயலாற்றல்

#### 3.2.1 வெகுமதிக்கான கொடுப்பனவுகள்

மீளாய்வாண்டில் பல்வேறு சந்தர்ப்பங்களின் கீழ் நிதியத்திலிருந்து தலைமை பரிசோதகர் நிலை மற்றும் அதற்கு கீழ் நிலையிலுள்ள 396287 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்காக சாதாரண மற்றும் விசேட கட்டுநிதிகளின் கீழ் ரூபா 553.4 மில்லியன் வெகுமதிக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்காக 81276 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 373.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் பொலிஸ் மா அதிபரின் பரிந்துரையின் மீது குற்றங்களை வெளிக்கொண்டுவந்திருந்தமைக்காக 1160 உத்தியோகத்தர்களிற்கும் 72 பொது மக்களிற்கும் ரூபா 29.9 மில்லியன் விசேட வெகுமதியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்காக 762 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 17.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வெகுமதிகள் கொடுப்பனவுக் கட்டுப்பாடு